கடற்கரை கவியரங்கு– 665

நாள்: 06-09-2026

இயன்நிலை அறிவோம்!

சொல்லுக்கும் செயலுக்கும், சுடர்விடும் அறிவுக்கும்;
இல்லாத தொடர்பேது கூறுவாய் மனம் நீயே?
பொல்லாத நிலையென்று தள்ளுவது வாழ்க்கையல்ல!
வல்லாரும் நல்லோரும் வலுவிழத்தல் இயல்தானே?

கல்லார்க்கும் அறிவுண்டு கற்பனையும் தானுண்டு!
எல்லோர்க்கும் இப்புவியில் இடமென்றும் உண்டு!
இல்லாது போவதும் ஓர்நாள் நடக்கும் தானே?
பொல்லாத உயிரென்று உலகில் ஏதுமில்லை!

பொலிவான நிலையென்றுப் பொங்கிட ஏதுமில்லை!
மலிவான புனைகதைகள் மனதில் ஏற்றாதீர்!
புலிக்கு மான் இரையாம்! மானுக்கு தழை இரையாம்!
மேலென்று கீழென்று முயங்கிட இங்கேதுமில்லை!

கோலத்தின் அழகெல்லாம் மழைத்துளியில் சிதைவதுபோல்,
ஆலமாய் வரும் மழைத்துளியும் சாக்கடையில் சுகமிழக்கும்!
நீலமாம் வானழகை நிறைக்குமோ உச்சி வெயில்?
கோலமிடும் அழகைக் கொஞ்சிட மனம் வேண்டும்!

சீலமாய்ப் பலவுயிரும் சீர்பட்டு வாழ்ந்தால்தான்,
பாலமாய் நம்வாழ்வில் யாவும் கொண்டிடுவோம்!
எலியுண்ணும் பாம்பாலே தானியங்கள் தான் நிறையும்!
எட்டுத்திக்கும் நோக்கினால்தான் யாவும் விளங்கும்!

வட்டமிடும் கழுகாலும் சில உயிர்கள் மண்நீங்கும்!
கொட்டமிடும் யானைதானே காட்டை வளப்படுத்தும்?
திட்டமிட்டுப் பரம்பொருளும் செய்யும்நிலை இதுவோ!
எட்டுத் திக்கும் இயன்நிலையாம் செயல்நிலை இதுதானே!

- **கவிஞர் கவிவளவன்.**
08-08-2026